# குழித்துறை நகர்மன்றத்தின் 30-06-2022 வியாழக்கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்ற சாதாரணக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்.

## நகர் மன்ற தலைவர் திரு.பொன். ஆசைத்தம்பி அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்

1) குழித்துறை நகராட்சி பராமரிப்பிலுள்ள மார்த்தாண்டம் பேருந்து நிலையம் ரூ.365.86 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு நகராட்சி பராமரிப்பிலுள்ளது. மேற்படி பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள 27 கடைகளில் A.Block-ல் அமைந்துள்ள 13 கடைகளில் 4 கடைகள் மட்டும் உரிமம் வழங்கப்பட்டுள்ளது. 9 கடைகள் சுமார் மூன்று ஆண்டு காலமாக காலியாகவுள்ளது. B. Block- ல் 14 கடைகளிலும் உரிமம் வழங்கப்பட்டு நடைமுறையில் உள்ளது. மேற்படி கடைகள் அனைத்தும் தலா வைப்புத்தொகையாக ரூ.1,00,000/- நிர்ணயம் செய்யப்பட்டு நடைமுறையில் உள்ளது. எனவே வைப்புத்தொகை குறைவு செய்து வழங்க மன்றம் தீர்மானிக்கலாம்.

   மன்றத்தீர்மான எண். 148 - (1) வைப்புத் தொகை ரூ.50000/- என தீர்மானிக்கப்பட்டது.

2) நகராட்சிக்கு சொந்தமான பூங்காவில் அலங்கார நீரூற்றை சரி செய்து, குழந்தைகளுக்கான விளையாட்டு உபகரணங்கள் வைப்பது என மன்றம் தீர்மானிக்கலாம்.

   மன்றத்தீர்மான எண். 148 - (2) தீர்மானிக்கப்பட்டது.

3) 3–வது வார்டில் மின்கம்பம் எண்.42, 43, 52 போக்குவரத்திற்கு இடையூறாக உள்ளதால் சாலையின் ஓரமாக மாற்றி அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

   மன்றத்தீர்மான எண். 148 - (3) தீர்மானிக்கப்பட்டது.

## 3-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.லு. ஷாலின் சுஜாதா கொண்டு வரும் தீர்மானம்

1) ஜேக்கப் நகரில் உள்ள மின்கம்பத்தில் தெரு விளக்குகள் போட மன்றம் தீர்மானித்தல் அமைத்தல்.

மன்றத்தீர்மான எண். 149 - (1) தீர்மானிக்கப்பட்டது

2) நரியன்விளையிலிருந்து விஜயகுமார் வீடு வரை உள்ள சாலையில் காங்கிரீட்ரோடு போட இம்மன்றம் தீர்மானித்தல்

மன்றத்தீர்மான எண். 149 - (2) தீர்மானிக்கப்பட்டது

3) இடைவிளாகம் மிஷன் வீடு பக்கத்தில் உள்ள சாலையில் காங்கிரீட்ரோடு போட இம்மன்றம் தீர்மானித்தல்

மன்றத்தீர்மான எண். 149 - (3) தீர்மானிக்கப்பட்டது

4) இடைவிளாகம் பார்க்கவன் வீட்டின் பக்கத்திலிருந்து முருவிளாஞ்சியில் ரெஜியின் வீட்டின் அருகில் உள்ள நடைபாதையில் காங்கிரீட் தளம் அமைக்க மன்றம் தீர்மானித்தல்.

மன்றத்தீர்மான எண். 149 - (4) தீர்மானிக்கப்பட்டது

5) இடைவிளாகம் சுபாஷ் வீட்டின் அருகாமையில் உள்ள மின்கம்பத்தை மாற்றி நடைபாதையின் ஒரத்தில் போட இம்மன்றம் தீர்மானித்தல்

மன்றத்தீர்மான எண். 149 - (5) தீர்மானிக்கப்பட்டது

6) வள்ளிக்கோட்டில் பொது குடிநீர் இணைப்பை இருக்கிற இடத்திலிருந்து மாற்றி வேறு ஒரு இடத்தில் போட இம்மன்றம் தீர்மானித்தல்

மன்றத்தீர்மான எண். 149 - (6) தீர்மானிக்கப்பட்டது

7) ஜேக்கப் நகர் வேலை நடந்து கொண்டிருக்கிறது. அந்த இடத்தில் சுமார் 15 மீட்டர் நீளம் கான்கிரீட் தளம் போடவில்லை. அந்த இடத்திலும் கான்கிரீட் போட வேண்டும்.

மன்றத்தீர்மான எண். 149 - (7) தீர்மானிக்கப்பட்டது

8) பவித்ரா, பாபுராஜ் வீட்டின் அருகில் உள்ள சாலையில் மழை பெய்யும் போது சாலையில் மழைநீர் தேங்கி நிற்கிறது. அந்த இடத்திலும் கான்கிரீட் போட வேண்டும்.

மன்றத்தீர்மான எண். 149 - (8) தீர்மானிக்கப்பட்டது

4-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.சி. லலிதா கொண்டு வரும் தீர்மானம்

1) வள்ளிக்கோடு கோயில் பக்கம் அச்சுதன் அவர்கள் வீட்டுப்பக்கம் போக்குவரத்துக்கு இடையூறாக நிற்கும் மின்கம்பம் மாற்ற மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 150 - (1) தீர்மானிக்கப்பட்டது

2) .கலையன் குளம் AG சபை முன்பு திரு. விஜயராஜ் வீட்டுப்பக்கம் நிற்கும் மின்கம்பம் மாற்றி அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 150 - (2) தீர்மானிக்கப்பட்டது

3) கோட்டவிளை திரு. ஷாஜி வீட்டு முன் நிற்கும் 64-ம் எண் கொண்ட மின்கம்பம் மாற்றி அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 150 - (3) தீர்மானிக்கப்பட்டது

4) கல்வெட்டான் குழியில் போக்குவரத்துக்கு இடையூறாக நிற்கும் 27, 28, 31, 32 எண் மின்கம்பங்களையும் மாற்றி அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 150 - (4) தீர்மானிக்கப்பட்டது

5) வள்ளிக்கோட்டில் படிப்பகம் முன் நிற்கும் மின்கம்பத்தில் புதியதாக Tube Light அமைத்து தர மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 150 - (5) தீர்மானிக்கப்பட்டது

6) மிட்ஸ் ஆபீஸ் பக்கத்திலிருந்து அம்பயந்தலவிளை செல்லும் சாலை மிகவும் பழுதடைந்து உள்ளது. அதனை சிமெண்ட் தளம் அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 150 - (6) தீர்மானிக்கப்பட்டது

7) கழுவன்திட்டையிலிருந்து அம்பலத்துவிளை செல்லும் பாதையை சரி செய்ய மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 150 - (7) தீர்மானிக்கப்பட்டது

6-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.V. விஜு கொண்டு வரும் தீர்மானம்

1) மேலே அம்மன்கோவில் அருகில் இருந்து கல்வெட்டு வரையிலும் ஒடையின் உள்பகுதி சரி செய்து மூடி அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 151 - (1) தீர்மானிக்கப்பட்டது

2) பெருந்தெரு ஸ்ரீதர் ஜி அவர்கள் வீட்டின் அருகில் இருந்து கல்வெட்டு வரையிலும் ஒடை அமைத்து மூடி போட மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 151 - (2) தீர்மானிக்கப்பட்டது

3) வார்டில் உள்ள அனைத்து மின்கம்பங்களிலும் LED விளக்கு பொருத்த மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 151 - (3) தீர்மானிக்கப்பட்டது

7-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.U.R. விஜயலெட்சுமி கொண்டு வரும் தீர்மானம்

1) நரியன்விளை திரு. விஜயகுமார் வீடு அருகில் உள்ள மின்கம்பத்தில் (மின்கம்ப எண்.67) புதியதாக மின் விளக்கு பேடுவதற்கு மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 152 - (1) தீர்மானிக்கப்பட்டது

2) கல்பாலத்தடி டீ கடை ராஜன் கடை அருகில் பொது மக்கள் நடந்து செல்லும் நடை பாதையில் பொதுமக்கள் நடந்து செல்ல முடியாத நிலையில் தனியார் வாகனங்கள் நிறுத்தி வைக்கப்படுகிறது. இதனை தடுப்பதற்கு நடைபாதை அருகில் அலங்கார கம்பி அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 152 - (2) தீர்மானிக்கப்பட்டது

<u>8-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.G.S. மினிகுமாரி. கொண்டு வரும் தீர்மானம்</u>

1) வைஸ்றாய் ரோட்டில் Pipe Line மற்றும் சிமெண்ட் தளம் அமைத்து பாலம் அமைப்பது சம்மந்தமாக மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 153 - (1) தீர்மானிக்கப்பட்டது

2) போஸ்ட் எண்.55, 56, 58 மற்றும் 8-ஆம் எண் போஸ்டிலும் புதிய Light அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 153 - (2) தீர்மானிக்கப்பட்டது

3) செங்கன்மூலை வார்டில் புதிய பாலத்தின் வலது புறம் ஒடை தூர்வாரி Slab போட மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 153 - (3) தீர்மானிக்கப்பட்டது

4) தேவிகுமாரி கல்லூரி பாதையிலிருந்து வரும் மழைநீர் பழைய ஆன்றோ ஆஸ்பத்திரி அருகில் தேங்கி நிற்கிறது. அதனை திரு. அழகப்பன் வீடு அருகில் உள்ள கல்வெட்டு வரை ஒடை அமைத்து Slab போட்டு தர மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 153 - (4) தீர்மானிக்கப்பட்டது

5) வைஸ்றாய் ரோட்டில் 47-ஆம் எண் போஸ்டிலிருந்து ஒரு போஸ்ட் விரிவு செய்து Light அமைத்து தர மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 153 - (5) தீர்மானிக்கப்பட்டது

6) குழித்துறையில் நாகர்கோயில் பேருந்து நிறுத்தம் முன் மேடுபள்ளமாக காணப்படுவதுடன் பயணிகள் பேருந்தில் ஏற முடியாத நிலை உள்ளது. எனவே உடனடியாக இன்டர்லாக் பதித்து சரி செய்ய இந்த மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 153 - (6) தீர்மானிக்கப்பட்டது

<u>9-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.எம்.பி. ரவி கொண்டு வரும் தீர்மானம்</u>

1) ஜோஸ்கோ பர்னிச்சர் கடை அருகாமையிலிருந்து திரு. கிருஷ்ணன் நாயர் வீடு வரையிலும் உள்ள சாலையில் Inter lock போடப்பட்டுள்ள இடத்தை தவிர மீதமுள்ள சாலையில் Inter lock போட மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 154 - (1) தீர்மானிக்கப்பட்டது

2) விளவங்கோடு ஆற்று கடவில் பொதுமக்கள் குளிப்பதற்கு பயன்படுத்தி வரும் படித்துறை இடிந்துள்ளது. எனவே பொதுமக்கள் நின்று குளிப்பதற்கு புதிய படித்துறை கட்ட மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 154 - (2) தீர்மானிக்கப்பட்டது

3) குழித்துறை நகராட்சி எல்லைகளுக்குள் நகராட்சியை ஒட்டிள்ள பஞ்சாயத்து பகுதிகளிலிருந்து குப்பைகளையும் கழிவுகளையும் கொட்டுவதால் நகராட்சி பகுதிகள் மிகவும் சுகாதார சீர்கேடு ஏற்பட்டு வருகிறது. ஆகையால் வெளிப்பகுதிகளிலுள்ள குப்பைகளை நகராட்சி பகுதிகளில் கொட்டுவதை தடை செய்ய மாவட்ட ஆட்சித்தலைவரை கேட்டு மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 154 - (3) தீர்மானிக்கப்பட்டது

<u>10-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.G. ஜெயின்சாந்தி கொண்டு வரும் தீர்மானம்</u>

1) குழித்துறை மலங்கரை சிறியன் கத்தோலிக்கா சர்ச் முதல் திரு. டேவிட்ராஜ் அவேர்கள் வீடு அருகில் உள்ள பழைய கல்வெட்டு வரை ஒடை அமைத்து அடைந்துள்ள கல்வெட்டை திறந்து மழைநீர் வடிகால் ஒடை அமைக்க இந்த மன்றம் தீர்மானித்தல்.

மன்றத்தீர்மான எண். 155 - (1) தீர்மானிக்கப்பட்டது

2) குழித்துறை அரசு மேல்நிலை பள்ளி விளவங்கோட்டின் கடைசி ஒரம் பழைய கழிவறைகள் இருக்கும் பகுதி விளவங்கோடு சாலையில் இருந்து பெரியவிளை, கல்லுபொற்றை, தெற்றிவிளை, தேவிகுமாரி மகளிர் கல்லூரி

ஆகிய பகுதிகளுக்கு வாகனங்கள் செல்வதற்கு இடஞ்சலாக உள்ள 15 சதுர அடி (V) வடிவ மதில் சுவரை மாற்றி கட்டுவதற்கு பொது மக்கள் நகராட்சிக்கு நிதி தருவதாக பொதுமக்கள் கடிதம் மலம் எனக்கு தெரிவித்துள்ளனர். எனவே பொது மக்கள் நலன் கருதி சம்மந்தப்பட்ட இடத்தில் மதில் சுவர் மாற்றி கட்டும் பணியை செய்ய இந்த மன்றம் தீர்மானித்தல்.

மன்றத்தீர்மான எண். 155 - (2) இடம் பார்வையிட்டு நகராட்சிக்கு சொந்தமான இடமாக இருந்தால் பணி மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது

3) குழித்துறை நகராட்சியில் வருவாய் உதவியாளர் திருமதி. லீமா அவர்கள் வார்டு எண்.10-ல் வரி வசூலிக்க செல்லும் போது முறையாக டிமண்ட் (Demand Notice) நோட்டீஸ் வழங்காமல், வீடு மற்றும் நிறுவன உரிமையாளர்களிடம் வரி கட்ட செல்லும் போது அனாகரீக வார்த்தைகளை பிரகிப்பதாக திருமதி. பேபி சரோஜம் மற்றும் திரு.கே. பிரசன்குமார், திரு.ஆர். செல்வன், திருமதி.டி. கீலார் கிரிஜா, திரு. அர்சுணன் ஆகியோர் மற்றும் ஏராளமானவர்கள் என்னிடம் நேரில் புகார் தெரிவித்துள்ளனர். நான் விசாரித்ததில் மேற்படி புகார் உண்மையாக தெரியவருகிறது. எனவே அவரை குழித்துறை நகர்மன்ற தீர்மான எண்.95 (1) நாள் .2022-ன்படி உடனடியாக நடவடிக்கை எடுக்க இந்த மன்றம் தீர்மானித்தல்.

மன்றத்தீர்மான எண். 155 - (3) திருமதி. பேபி சரோஜம் மற்றும் திரு.கே. பிரசன்குமார், திரு.ஆர். செல்வன், திருமதி.டி. கீலார் கிரிஜா, திரு. அர்சுணன் ஆகியோர்கள் ஆணையாளர் அவர்களிடம் எழுத்து பூர்வமான புகார் தரும்பட்சத்தில் அலுவல் ரீதியிலான நடவடிக்கை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

4) குழித்துறை சுந்தரா பல் மருத்துவமனை முன் நிற்கும் மின் கம்பத்தில் தெருவிளக்கு அமைக்க இந்த மன்றம் தீர்மானித்தல்.

மன்றத்தீர்மான எண். 155 - (4) தீர்மானிக்கப்பட்டது

<u>11-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.J.K. றோஸ்லெட் கொண்டு வரும் தீர்மானம்</u>

1) 11-வது வார்டு இலட்ச்சி அம்மன் கோயில் அருகில் உள்ள கழிவு நீர் ஒடை உடைந்து காணப்படுகிறது. அதை சீரமைத்து தர வேண்டி மன்றம் தீர்மானிக்கலாம்.

   மன்றத்தீர்மான எண். 156 - (1) தீர்மானிக்கப்பட்டது

2) 11-வது வார்டு குளத்தங்கரை பகுதியில் திரு. பாபு அவர்களின் வீட்டின் அருகில் உள்ள டிரான்ஸ்பார்மர் சரிந்த நிலையில் மக்களுக்கு அச்சத்தை ஏற்படுத்தும் வகையில் காணப்படுகிறது. அதை உடனே சரி செய்ய வேண்டி மன்றம் தீர்மானிக்கலாம்.

   மன்றத்தீர்மான எண். 156 - (2) தீர்மானிக்கப்பட்டது

<u>14-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி. . லில்லி புஷ்பம் கொண்டு வரும் தீர்மானம்</u>

1) 14-வது வார்டு சீரான்விளையில் வரிக்கி வீட்டின் முன் பகுதியிலிருந்து சீரான் விளை செல்லும் பாதையில் எந்த ஒருமின்கம்பமும் லைற்றும் இல்லை. அதனால் மக்களுக்கு தெருவிளக்கு அமைத்து கொடுக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

   மன்றத்தீர்மான எண். 157 - (1) தீர்மானிக்கப்பட்டது

2) ‘சீரான்விளையில் முருகன் வீட்டு முன்பும் அதன் பக்கத்தில் இரண்டு, மூன்று வீட்டுகாரர்களுக்கு ரோடு காங்கிரீட் போட மன்றம் தீர்மானிக்கலாம்.

   மன்றத்தீர்மான எண். 157 - (2) தீர்மானிக்கப்பட்டது

<u>15-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு. ரிகன் கொண்டு வரும் தீர்மானம்</u>

1) நகராட்சிக்கு உட்பட்ட 15-வது வார்டு தேவராஜ்.I என்பவர் வீட்டின் முன் பகுதியிலுள்ள ஒடையை சரி செய்து சிமெண்ட் மூடி அமைத்து தர மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 158 - (1) தீர்மானிக்கப்பட்டது

2) திரு.எல். நெல்சன், பாபு என்பவர் வீட்டின் முன் அமைந்துள்ள நகராட்சிக்கு சொந்தமான கிணறு உள்ளது. கிணற்றை தூர்வாரி சீர் செய்து தர மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 158 - (2) தீர்மானிக்கப்பட்டது

3) நகராட்சிக்கு உட்பட்ட அட்டை குளத்தை ஒட்டி புல், புதர், விலங்கு கழிவுகள், பிளாஸ்டிக் கழிவுகள் போடப்பட்டு மனித சுகாதார சீர்கேடு ஏற்படுகிறது. ஆகவே குளத்தை ஒட்டி உள்ள பகுதியை சுத்தப்படுத்தி தர மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.158 - (3) பொதுப்பணி துறையை கேட்டு தீர்மானிக்கப்பட்டது

4) 15-வது வார்டு எஸ். செய்யது அலி, எஸ். ஷாஜகான் அவர்களின் வீட்டின் முன் பகுதியிலுள்ள மின் கம்பத்தில் தெரு விளக்கு அமைத்து தர மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 158 - (4) தீர்மானிக்கப்பட்டது

<u>16-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.K. இரத்தினமணி கொண்டு வரும் தீர்மானம்</u>

1) கீழ்பம்மம் பேருந்து நிறுத்தத்தில் இருந்து APJ நகர் சாலையில் வடிகால் ஒடை மற்றும் பக்கசுவர் கட்ட மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 159 - (1) தீர்மானிக்கப்பட்டது

17-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.A. அருள்ராஜ் கொண்டு வரும் தீர்மானம்

1) வடக்கு தெரு லட்சுமி விலாஸ் பேக்கரி முதல் பாஸ்டேர்ஸ் ரோடு வழியாக பண்ணியணி சாலையை இன்டர் லாக் சாலையாக மாற்றி அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 160 - (1) தீர்மானிக்கப்பட்டது

2) மார்த்தாண்டம் ஜங்சனில் இருந்து வடக்கு தெருவழியாக பண்ணியணி செல்லும் கழிவுநீர் ஓடையை சரி செய்ய மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 160 - (2) தீர்மானிக்கப்பட்டது

3) வடக்கு தெரு ஜங்சன் வீட்டிற்கு அருகிலிருந்து மேலக்குளம் செல்லுகின்ற சாலையை இண்டர்லாக் அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 160 - (3) தீர்மானிக்கப்பட்டது

4) வடக்கு தெரு அசோகன் வீட்டிற்கு செல்லும் இடத்தில் மின்விளக்கு அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 160 - (4) தீர்மானிக்கப்பட்டது

பொருள் எண். 1

குழித்துறை நகராட்சியின் 97-வது வாவுபலி பொருட்காட்சி உரிமங்களுக்கான ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை பத்திரிக்கை விளம்பரம் செய்த வகைக்கு கீழ்கண்டவாறு செலவினப்பட்டியல்கள் பெறப்பட்டுள்ளது.

1) தினத்தந்தி - ரூ.29,820/-
2) தினகரன் - ரூ.26,040/-

மேற்படி நாளிதழ்களிடமிருந்து பெறப்பட்ட விலைப்பட்டியல் தொகையினை சம்மந்தப்பட்ட நிறுவனங்களுக்கு வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.1400/2022/ஆ2

மன்றத்தீர்மான எண். 161 - அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண். 2</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு வாகனம் TN.75-L-0828-ற்கு ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்வதற்கு என Derik Motors (P) Ltd. Nagercoil மூலம் ரூ.32132/-க்கு விலைப்புள்ளி பெறப்பட்டுள்ளது. மேற்படி வாகனத்திற்கான பழுதுகள் நீக்கம் செய்யவும் அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியில் செலவிடவும், மேலும் அரசு அங்கீகாரம் பெற்ற Derik Motors நிறுவனத்தில் பணியினை மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு.

<u>அ.கு.-</u> நகர்மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.
**ந.க.எண்.**2866/2012/இ1.

மன்றத்தீர்மான எண். 162 - அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண். 3</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான Scorpio வாகனம் TN-75-AL-6196-க்கு வாட்டர் சர்வீஸ் மற்றும் பழுதுகள் சரி செய்வதற்கு நகர்மன்ற தீர்மானம் எண்.118 நாள்.20/5/2022-ன் படி ரூ.11447-க்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. வாகனத்தில் உள்ள பழுதுகளை சரி செய்ய டெரிக் மோட்டார்ஸ் நிறுவனத்தில் கொண்டு சென்று பழுதுகளை சரி செய்த போது கூடுதல் பழுதுகள் ஏற்பட்டுள்ளதை கண்டறியப்பட்டதன் பேரில் அதனையும் சேர்த்து சரி செய்த வகையில் அனுமதிக்கப்பட்ட தொகையினை விட கூடுதலாக ரூ.18983/- செலவு செய்திட வேண்டிய நிலை ஏற்பட்டதால் அனைத்து பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே கூடுதல் செலவீனம் ரூ.18983/-ஐ உரிய நிறுவனத்திற்கு வழங்கிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.

<u>அ.கு.-</u> மன்றம் அனுமதி வழங்கலாம்.
**ந.க.எண்.**113/2019/இ1

மன்றத்தீர்மான எண். 163 - அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண். 4</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.7-ல் அமைந்துள்ள பெருங்குளம் முதல் கல்பாலத்தடி இசக்கியம்மன் கோயில் வரையுள்ள சாலை சரி செய்வது தொடர்பாக நகர்மன்றத்தீர்மான எண்.49, நாள்.11-04-2022-ன் படி மறு ஒப்பந்தப்புள்ளி கோர அனுமதிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் ஒப்பந்நபுள்ளி அறிவிப்பினை தினசரி செய்தி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்ட வகையில் பட்டியல் தொகை ரூ.16695/-ஐ தினமலர் நாளிதழுக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- மன்றம் அனுமதி வழங்கலாம்
**ந.க.எண்.**2606/2021**இ**1.

மன்றத்தீர்மான எண். 164 - அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண். 5</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 7 இல் அமைந்துள்ள பெருங்குளம் முதல் கல்பாலத்தடி இசக்கியம்மன் கோவில் வரை உள்ள சாலை சரி செய்வதற்கென்று ரூ.36.25 லட்சம் மதிப்பீட்டில் 15வது நிதிக்குழு மானியம் 2020-2021 untied Grant-ன் கீழ் பணியினை மேற்கொள்ள நகர்மன்ற தீர்மானம் எண்:49 நாள்:11-04-22-ன் படி மறு ஒப்பந்தப்புள்ளி 01-06-2022-ல் கோரப்பட்டு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பின்வருமாறு

1) MJD Construction and Engineering contractors private limited, Kannumamoodu — மதிப்பீட்டை விட 2.2% குறைவு
2) K. Manikandan Government Contractor Kannumamoodu — மதிப்பீட்டை விட 3.41% குறைவு

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்த புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.K.மணிகண்டன் என்பவரின் ஒப்பந்த புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அ.கு.- குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு K.மணிகண்டன் என்பவரின் ஒப்பந்த புள்ளியை ஏற்று திட்டப்பணியாக இருப்பதினால் நகர்மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.
**ந.க.எண்.**2606/2021**இ**1.

மன்றத்தீர்மான எண். 165 - அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண். 6</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 6-ல் உள்ள சிவன் கோவில் சாலையில் மூடியுடன் கூடிய கால்வாய் அமைப்பதற்கென ரூ.**7.00** இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள நகர் மன்ற தீர்மான எண்.139 நாள்.14/6/2022-ன் கீழ் அனுமதி பெறப்பட்டுள்ளது. இப்பணிக்கான ஒப்பந்தபுள்ளி 24/6/2022ல் நடைபெற்றதில் இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் பெறப்பட்டன. அதன் விபரம் பின்வருமாறு.

1) P. ஜெயசந்திரன் மதிப்பீட்டை விட 0.18% குறைவு
2) P. ஜெயபிரகாஷ் மதிப்பீட்டை விட 0.24% அதிகம்

இவ்விரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் குறைவான ஒப்பந்தபுள்ளி வழங்கிய திரு. P. ஜெயசந்திரன் அவர்களின் ஒப்பந்தபுள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- மன்றம் அனுமதி வழங்கலாம்
**ந.க.எண்.**1714/2022/இ1.

மன்றத்தீர்மான எண். 166 - அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண். 7</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட ஞாறான்விளை பிரதான சாலை தேவன் விளை சந்திப்பில் உள்ள மழைநீர் வடிகால் பழுதுகளை சரி செய்யும் பணிக்கு ரூ.65,000 மதிப்பீட்டில் நகர்மன்ற தீர்மானம் எண்.138 நாள்.14/6/2022 அனுமதி பெற்று 24/6/2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. அவற்றின் விபரம் கீழ்கண்டவாறு

1. S.பாபு மதிப்பீட்டை விட 0.17% குறைவு
2. C.சுரேஷ் மதிப்பீட்டை விட 1.06% அதிகம்.

இவ்விரு ஒப்பந்த புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவாக வழங்கிய திரு. S.பாபு என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- மன்றம் அனுமதி வழங்கலாம்
**ந.க.எண்.**1715/2022/இ1.

மன்றத்தீர்மான எண். 167 - அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண். 8</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 13 இல் உள்ள கண்ணக்கோடு சிங்களேர் சாலை பராமரிப்பு பணிகளுக்கென ரூ.24.00 இலட்சம் மதிப்பீட்டில் 15வது நிதிக்குழு மானியம் 2021-22-ன் கீழ் பணி நடைபெற உள்ளது. தற்போது சாலையில் உள்ள சிறு பாலம் பழுதடைந்துள்ளதை சரி செய்வதற்கு ரூ.3.30 இலட்சத்தில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு நகர்மன்ற தீர்மானம் எண்.142 நாள். 14/06/2022-ன் படி அனுமதி பெற்று 24/06/2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்த புள்ளிகள் பெறப்பட்டன. அவற்றின் விவரம் கீழ்க்கண்டவாறு

1. S.பாபு — மதிப்பீட்டை விட 0.10% குறைவு
2. C.சுரேஷ் — மதிப்பீட்டை விட 0.28% அதிகம்.

இவ்விரு ஒப்பந்த புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவாக வழங்கிய திரு. S.பாபு என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- மன்றம் அனுமதி வழங்கலாம்
ந.க.எண்.1728/2022/இ1.

மன்றத்தீர்மான எண். 168 - அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண். 9</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் Mini mast Light பொருத்துவதற்காக நமக்கு நாமே திட்டம் 2021-2022-ன் கீழ் மேற்கொள்ளும் பணிகளுக்கான ஒப்பந்தபுள்ளி அறிவிப்பினை தினசரி செய்தி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்ட வகையில் பட்டியல் தொகை ரூ. 23,564 மதுரை மணி நாளிதழுக்கு வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- மன்றம் அனுமதி வழங்கலாம்
ந.க.எண்.1242/2022/இ1.

மன்றத்தீர்மான எண். 169 - அனுமதிக்கப்பட்டது

பொருள் எண். 10

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் Mini Mast Light பொருத்துவதற்காக நமக்கு நாமே திட்டம் 2021-2022-ன் கீழ் ரூ.12.00 இலட்சம் மதிப்பீட்டில் நகராட்சி நிர்வாக இயக்குனர் சென்னை அவர்களின் கடித எண்.27519-40/2021/P2 மூலம் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன்பேரில் குழித்துறை நகராட்சி ரவுண்டானா, வெட்டுவெந்தி சப்பாத்து மற்றும் விஎல்சி மைதானம் ஆகிய மூன்று இடங்களில் ஆறு எண்ணம் 150W LED பொருத்தப்பட்ட 12 மீட்டர் உயரம் உள்ள Mini mast Light அமைக்கும் பணிக்கு 15-06-2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்த புள்ளிகளின் விவரம் கீழ்க்கண்டவாறு

1. ஸ்ரீ கங்கா எலெக்ட்ரிக்கல்ஸ் மதிப்பீட்டை விட 0.23% குறைவு
2. குமார் ஏஜென்சிஸ் மதிப்பீட்டை விட 0.06% அதிகம்

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்த புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஸ்ரீ கங்கா எலக்ட்ரிகல்ஸ் ஒப்பந்தப்புள்ளி ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அ.கு.- குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஸ்ரீ கங்கா எலெக்ட்ரிக்கல்ஸ் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி ஏற்று திட்ட பணியாக இருப்பதினால் நகர்மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்
ந.க.எண்.2607/2022/இ1.

மன்றத்தீர்மான எண். 170 - அனுமதிக்கப்பட்டது

பொருள் எண். 11

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் Mini mast Light பொருத்துவதற்காக நமக்கு நாமே திட்டம் 2021-2022-ன் கீழ் ரூ.12.00 இலட்சம் மதிப்பீட்டில் நகராட்சி நிர்வாக இயக்குனர் சென்னை அவர்களின் கடித எண்.27519-40/2021/P2 மூலம் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன்பேரில் ஞாறான்விளை பகுதியில் அமைந்துள்ள தலைமை நீரேற்று நிலையத்தில் மூன்று இடங்களில் ஆறு எண்ணம் 150W LED பொருத்தப்பட்ட 12 மீட்டர் உயரம் உள்ள Mini mast Light அமைக்கவும் மேற்படி பணிக்கு 15-06-2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்த புள்ளிகளின் விவரம் கீழ்க்கண்டவாறு

1. ஸ்ரீ கங்கா எலெக்ட்ரிக்கல்ஸ் மதிப்பீட்டை விட 0.23% குறைவு
2. குமார் ஏஜென்சிஸ் மதிப்பீட்டை விட 0.06% அதிகம்

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்த புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஸ்ரீ கங்கா எலக்ட்ரிகல்ஸ் ஒப்பந்தப்புள்ளி ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அ.கு.- குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஸ்ரீ கங்கா எலெக்ட்ரிக்கல்ஸ் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி ஏற்று திட்ட பணியாக இருப்பதினால் நகர்மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண்.**2606/2022/இ1.

மன்றத்தீர்மான எண். 171 - அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண். 12</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் Mini mast Light பொருத்துவதற்காக நமக்கு நாமே திட்டம் 2021-2022-ன் கீழ் ரூ.12.00 இலட்சம் மதிப்பீட்டில் நகராட்சி நிர்வாக இயக்குனர் சென்னை அவர்களின் கடித எண்.27519-40/2021/P2 மூலம் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன்பேரில் தீயணைப்பு நிலையம், முத்தாரம்மன் கோவில் மற்றும் வடக்கு தெரு ஆகிய மூன்று இடங்களில் ஆறு எண்ணம் 150W LED பொருத்தப்பட்ட 12 மீட்டர் உயரம் உள்ள Mini mast Light அமைக்கும் பணிக்கு 15-06-2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்த புள்ளிகளின் விவரம் கீழ்க்கண்டவாறு

1. ஸ்ரீ கங்கா எலெக்ட்ரிக்கல்ஸ் மதிப்பீட்டை விட 0.23% குறைவு
2. குமார் ஏஜென்சிஸ் மதிப்பீட்டை விட 0.06% அதிகம்

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்த புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஸ்ரீ கங்கா எலக்ட்ரிகல்ஸ் ஒப்பந்தப்புள்ளி ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அ.கு.- குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஸ்ரீ கங்கா எலெக்ட்ரிக்கல்ஸ் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி ஏற்று திட்ட பணியாக இருப்பதினால் நகர்மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண்.**2608/2022/இ1.

மன்றத்தீர்மான எண். 172 - அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண். 13</u>

குழித்துறை நகராட்சி வளாகத்தில் உள்ள கழிப்பிடம் மிகவும் பழுதடைந்து பயன்படுத்த முடியாமல் உள்ளது. எனவே மேற்கண்ட கழிப்பிடத்தை பழுது பார்க்கும் பணிக்கு உத்தேச மதிப்பீடு ரூ.1.90 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. பணியின் அவசியம் கருதி பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- மன்றம் அனுமதி வழங்கலாம்
ந.க.எண்.1729/2022/இ1.

மன்றத்தீர்மான எண். 173 - அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண். 14</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட மார்த்தாண்டம் பகுதியில் உள்ள தினசரி காய்கறி சந்தை கட்டுவதற்கான ரூ.4.239 கோடி மதிப்பீட்டில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2020-21-ன் கீழ் அங்கீகரிக்கப்பட்டு G.o.(M.S) NO.16 நாள்.20/01/22ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டது. இந்நிலையில் அதில் அங்கீகரிக்கப்பட்ட வடிவமைப்பு நகர்மன்ற தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்களால் நிராகரிக்கப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் கன்னியாகுமரி அவர்களின் முன்னிலையில் கட்டிட ஆலோசகர் மூலம் வேறு வடிவமைப்பு தயார் செய்யப்பட்டுள்ளது. அவ்வடிவமைப்பில் காய்கறி சந்தையில் உள்ள அனைத்து கடைகளும் இடிக்கப்படும் படியாக தயார் செய்யப்பட்டுள்ளது. காய்கறி சந்தையில் 2005-2006-ல் IDSMT திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட 28 கடைகளும் இடிக்கப்பட வேண்டியுள்ளது. இந்த 28 கடைகளும் IDSMT திட்டம் தலைவர் மற்றும் இயக்குனர் TUFIDCO சென்னை அவர்களின் 2004-2005 AM(B) நாள்.25/01/2005-ன் கீழ் ரூ.10.00 இலட்சம் கடனுதவி பெற்று கட்டப்பட்டது. தற்போது கடன் தொகை எதுவும் நிலுவை இன்றி முழுமையாக திரும்பச் செலுத்தப்பட்டுள்ளது. மேலும் கட்டிடங்கள் 17 வருடங்கள் முடிவடைந்துள்ள படியினாலும் கட்டிடம் சேதமடைந்து காணப்படுவதாலும் அதனை இடித்து அப்புறப்படுத்தி விட்டு புதிய கடைகள் கட்டுவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- மன்றம் அனுமதி வழங்கலாம்
ந.க.எண்.1967/2021/இ1.

மன்றத்தீர்மான எண். 174 - அனுமதிக்கப்பட்டது

பொருள் எண். 15

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 1 முதல் 21 வரை உள்ள தெருவிளக்குகளை பராமரிப்பதற்கு தனியார் ஒப்பந்ததாரர் கங்கா எலக்ட்ரிக்கல்ஸ், திருநெல்வேலி என்பவரிடம் 07.12.2020 முதல் 06.12.2021 வரை ஒப்படைக்கப்பட்டு பணி நல்ல முறையில் நடைபெற்று வந்தது. இப்பணியினை மீண்டும் இரண்டு வருடங்களுக்கு நீட்டிப்பு செய்யும் பட்சத்தில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதி பெற வேண்டும் என நகராட்சித் தலைமை பொறியாளர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.29045/2019/D02 நாள்.04.09.2020-ல் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி ஸ்ரீ கங்கா எலக்ட்ரிக்கல்ஸ் நிறுவன ஒப்பந்ததாரரின் கடிதத்தில் தெருவிளக்கு பராமரிப்பு பணிகளை 07.12.2021 முதல் 06.12.2022 வரை தற்போது உள்ள ஒப்பந்த விகிதத்திலேயே பணிகள் மேற்கொள்ள மேலும் ஒரு ஆண்டு காலத்திற்கு நீட்டிப்பு வழங்க கேட்டு அனுமதி கோரியுள்ளார். அதன்படி மீண்டும் ஓராண்டு காலத்திற்கு நீட்டிப்பு செய்து வழங்குமாறு நகராட்சி நிர்வாக இயக்குனர் சென்னை அவர்களுக்கு ந.க.எண்.1140/2020/இ1 நாள். 29/11/2021-ன் மூலம் அனுமதி கோரப்பட்டது. இதுநாள் வரை அனுமதி எதுவும் பெறப்படவில்லை. எனவே தெருவிளக்கு பராமரிப்பு பணிகளின் அவசியம் கருதி 30/06/2022 வரை பணி நீட்டிப்பு செய்ய மன்றத்தின் ஒப்புதல் நகர்மன்ற தீர்மானம் எண்.75 நாள்.29.04.2022 மூலம் அனுமதி பெறப்பட்டது. தற்போது நகராட்சி நிர்வாக இயக்குனர், சென்னை அவர்களிடமிருந்து அனுமதி பெறப்படும் வரை இப்பணியினை கங்கா எலக்ட்ரிக்கல்ஸ், திருநெல்வேலி அவர்களிடம் ஒப்பந்த விலை விகிதத்திலேயே பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.- மன்றம் அனுமதி வழங்கலாம்
ந.க.எண்.1140/2020/இ1.

மன்றத்தீர்மான எண். 175 - அனுமதிக்கப்பட்டது

பொருள் எண். 16

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான ஆண்டு குத்தகை இனங்களுக்கான பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி மட்டுமே பெறப்பட்டுள்ளது.

1) <u>கல்பாலத்தடி கட்டண கழிப்பறை</u>

(i) திரு.சி. ராஜமணி, மூப்புவிளைவீடு, மருதங்கோடு.

| | <u>ஒப்பந்தப்புள்ளிதொகை</u> | <u>சென்றவருடதொகை</u> |
|---|---|---|
| திரு.சி. ராஜமணி, மூப்புவிளைவீடு, மருதங்கோடு. | ரூ.11250/- | ரூ.11,025/- |

மேற்கண்ட இனத்திற்கு ஒரு நபர் மட்டுமே ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். இவ்வினத்தை பொறுத்தமட்டில் எவரும் ஏலம் எடுத்து கொள்ள முன்வருவதில்லை. மேலும் சென்ற வருடு தொகையினை விட கூடுதலாக உள்ளதாலும் ஒப்புதல் வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்
**ந.க.எண்**.3066/2021/**அ**2.

மன்றத்தீர்மான எண். 176 - அனுமதிக்கப்பட்டது

ஒப்பம்/-திரு.பொன். ஆசைத்தம்பி
நகர் மன்ற தலைவர்,
குழித்துறை நகராட்சி.

**/உண்மை நகல்/**

ஆணையாளர்,
குழித்துறை நகராட்சி.